# ஆனையிறவிலிருந்து யாழ்.நோக்கி இராணுவம்

RECEIVED 28-5-1986 PERIODICALS DIVISION LIBRARY

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 8 றம்ழான் 12 இதழ் 100

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22-5-1986

# மீண்டும் நடை பவனி

## இயக்கச்சியில் போராளிகள் முற்றுகை

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

மீண்டும் இராணுவத்தினர் கால்நடையாக நேற்றுக் காலை 7 மணிக்கு ஆனையிறவிலிருந்து குறிஞ்சாத்தீவு உப்பளம் வழியாக யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்

இதைத் தொடர்ந்து போராளிகள் இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு, பளைப் பகுதியைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டுள்ளனர்.

மிகவும் பரவலான முறையில் இராணுவத்தினர் சாரிசாரியாக குறிஞ்சாத்தீவு ஊடாக உள்ள காட்டுப்பகுதி வழியாக நகர்ந்து கொண்டிருப்பதைத் தொடர்ந்து ஆனையிறவால் கண்டிவீதி கான சகலபோக்குவரத்துக்களும் காலையில் இருந்து தடைப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்தும் பருத்தித்துறை முதலான இடங்களிலிருந்தும் சென்ற இ. போ. ச. பஸ்களும் மற்றும் வாகனங்களும் இயக்கச்சி சேரன்பற்றுக்கிராமசபை அலுவலகம் வரை சென்று திரும்பின

கொழும்பு முதலான இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வாகனங்

(5-ம் பக்கம் பார்க்க)

### யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் ஆட்சேப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி மீது நடந்த போர் விமானத் தாக்குதலை ஆட்சேபித்து யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள் நாளை வெள்ளிக்கிழமை கறுப்புப் பட்டி அணிந்து கடமை புரிவார்கள்.

நண்பகல் 12 மணிக்குப் பின் ஊர்வலமொன்றையும் நடத்துவார்கள். [ஐ]

# வல்வையில் நேற்று ‘பொம்பர்’ குண்டுமாரி

## ஷெல், துப்பாக்கித் தாக்குதல்

[வல்வெட்டித்துறை-புலோலி நிருபர்கள்]

**வல்வெட்டித்துறையில் நேற்றுப் பயங்கர விமானக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதலில் மூன்று ‘பொம்பர்’ விமானங்கள் உட்பட ஐந்து ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட்டன.**

சுமார் ஒன்றரை மணித்தியாலயம் இடைவிடாது இடம்பெற்ற இத்தாக்குதலில் மக்கள் வங்கி, நூல் நிலையம் உட்படப் பத்துக் கட்டிடங்கள் முற்றாகச் சேதமடைந்தன. பாடசாலை, கோயில் உட்பட நாபதுக்கு மேற்பட்ட கட்டிடங்கள் சிறிதளவு சேதமடைந்தன, பலர் காயமடைந்துள்ளார்கள்.

நேற்றுக்காலை 6-30 மணியளவில் வந்த மூன்று பொம்பர் விமானங்களும். ஐந்து ஹெலிகொப்டர்களுமே இத்தாக்குதல்களை மேற்கொண்டன. சுமார் ஒன்றரை மணித்தியாலம் இடம் பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தின்போது பதினறு குண்டுகள் பொழியப்பட்டதுடன், ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிவேட்டுக்களும் பரவலாகத்தீர்க்கப்பட்டன

மக்கள் கிடங்குகளிலும், பாதுகாப்பான இடங்களிலும் தஞ்சமடைந்தனர். கால்நடைகள் பல பலியாகின.

வல்வெட்டித்துறைப் பகுதியில் ஏற்கனவே நடைபெற்ற தாக்குதல்களையடுத்து அப்பகுதி மக்களில் பெரும்பகுதியினர் இடப்பெயர்ந்தமையினலேயே உயிர்ச் சேதங்கள் அவ்வளவாக இடம்பெறவில்லை. கலா செந்திலவேல் (20 வயது) உட்படப் பாதுகாப்பு ஊழியர் இருவர் இதுவரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

### பெரியபுல்லுமலையில் 3 ராணுவம் பலி; 4 பேர் காயம்

(மட்டக்களப்பு

அப்பாறை மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் அமைந்துள்ள பெரியபுல்லுமலை ராணுவ முகாம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது

நேற்று முன்தினம் நள்ளிரவு நடத்தப்பட்ட இத்தாக்குதல் சம்பவத்தின்போது மூன்று ராணுவத்தினர் கொல்லப்பட்டுளளதுடன் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ரொக்கட் லோஞ்சர் மற்றும் நவீனரக ஆயுதங்கள் இத்தாக்குதலின்போது தீவிரவாதிகளால் பயன்படுத்தப்பட்டதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [ரா]

### யாழ். மாவட்ட பாடசாலைகள் 3ம் நாளாக நடைபெறவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் நேற்று மூன்றுவது நாளாகப் பாடசாலை மாணவர்கள் மிகக் குறைவாக வந்ததால் வகுப்புக்கள் நடைபெறவில்லை.

யாழ்நகரில் உள்ள கல்லூரிகளுக்குச் சொற்பமான மாணவர்களே நேற்று வந்திருந்தனர் அவர்களும் காலை11 மணியவில் திரும்பி விட்டனர்.

சாவகச்சேரியில் நேற்றுக் காலை ஹெலிகொப்டர் வட்டமிட்டதைத் தொடர்ந்து காலை 11 மணிக்கே மாணவர்கள் வீடு திருப்பிவிட்டார்கள் சிலபாடசாலைகளில் பெற்றோர் சென்று பிள்ளைகளைக் கூட்டிச் சென்றனர் தென்மராட்சியிலும் மற்றும் பாடசாலைகளிலும் மாணவர்வரவு குறைவாக இருந்தது.

வடமராட்சியில் ‘பொம்பர்’ தாககுதலினல் கல்லூரிகளுக்கு நேற்று மாணவர்கள் செல்ல

[5-ம் பக்கம் பார்க்க]

### ‘சரத்’ மறைவையொட்டி இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க ‘புளட்’ வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரும் கலவானைத் தொகுதி ம. பி யுமான திரு. சரத்முத்தெட்டுவேகமவின் இறுதிச்சடங்குத் தினமான இன்று வியாழக்கிழமை யாழ் பிரதேசத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிககுமாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் [புளட்] பிரசுர மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)

### திருமலையில் ஒருவர் பலி; 16வீடுகளுக்குத் தீ

[திருகோணமலை]

திருமலை மாவட்டத்திலுள்ள [illegible] கிராமத்தில் இராணுவத்தினருடன் தேடுதல்வேட்டைக்கு உதவியாக சென்ற ஊர்காவல் படையினர் 16 தமிழர்களின் வீடுகளுக்குத் தீமூட்டினர்

நேற்று முன்தினம் இப்பயங்கரச்சம்பவம் இடம்பெற்றது

இச்சம்பவத்தின்போது பீதியடைந்து ஓடிய ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்

ஊர்காவல் படையினரின் தீவைப்புச் சம்பவம் குறித்து பிரஜைகள் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. [மா]

### 4 நாட்களின் பின்னர் வசாவிளான் ம. வி. மாணவியர் நேற்று விடுவிக்கப்பட்டனர்!

[யாழ்ப்பாணம்]

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை ஆயுதப் படையினர் பொறுப்பேற்ற போது விடுதியிலிருந்த 12 பேரும் மூன்று தினங்களுக்குப் பின்னர் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்

மகாவித்தியாலயத்தில்இவர்கள் இருப்பதாக ஆயுதப் படையினர் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரத்திற்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் இதுபற்றி அதிபருக்கு அறிவித்தார்.

அதிபர் திரு. கணேசநாதன், உப அதிபர் திரு வி அருணகிரிநாதர், காவலாளரின் சகோதரர், மாணவி ஒருவன்

(5-ம் பக்கம் பார்க்க)

### கொம்பனித் தெரு ஒருராணுவம்உட்பட 7 பேர் பலி

[கொழும்பு]

இராணுவத்தினருக்கும் பொது மக்களுககு மிடையில் கொழும்பு கொம்பனித் தெருவில் இடம்பெற்ற மோதலொன்றின்போது ஏழு பேர் பலியாகியுள்ளனர்

இறந்தவர்களில் ஒருவர் இராணுவத்தைச் சேர்ந்தவரென்றும் இன்னொருவர் சிங்களவரென்றும் மற்றவர்கள்

[5ம் பககம் பார்க்க]

# திருமலைசிமெந்துஆலை குண்டுவைத்துதகர்ப்பு

[திருகோணமலையிலிருந்து நமது நிருபர்]

திருக்கோணமலை சிமெந்துத் தொழிற்சாலைக்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டியினர் அங்கு குண்டுகளை வெடிக்க வைத்து பலத்த சேதத்தை விளைவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இலங்கை - ஜப்பான் கூட்டு முயற்சியுடன் சுமார் 40 கோடி ரூபா செலவில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்[illegible] என்றும் பெயரில் இயங்கும் இத்தொழிற்சாலைக்கு ஜப்பான் முப்பது வீதமான பணத்தை முதலீடு செய்துள்ளது.

திருக்கோணமலை நகரிலிருந்து 5 மைல் தூரத்தில் உள்ள சீனக்குடாவில் இத்தொழிசாலை இருக்கிறது

நேற்று அதிகாலைஒரு மணியளவில் ஆயுத பாணிகளாக சிமெந்து ஆலைக்குள் சென்ற இனந்தெரியாத கோஷ்டியினர் கட

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

B. B. C. Computerகள் இரண்டு விற்பனைக்கு உண்டு. இல. 41, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (C 2438)

உயர்விளைச்சலைபெற்று செய்கையாளரால் விரும்பி வாங்கும் பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. குறுகியகையிருப்பு. ஒரு கிலோ 250-00. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 2379]

கச்சேரி பஸ் நிலையத்திற்கு முன்பாக ஒரு பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: மயூரன் எண்டர் பிறைஸ், செல்லப்பாகட்டடம், 52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி; 22895 (C 2335)

### தேவை

விடுதி ஒன்றிற்கு பெண் சமையலாளர் தேவை. வயது 30க்கும்—50க்கு இடைப்பட்டவராகவும் விடுதியிலே தங்கியிருக்கக் கூடியவராகவும்இருத்தல்வேண்டும். 'GS' Ladies' Academy, 57, Victoria Road, Jaffna. [C 2435]

முரசுமோட்டை (பரந்தன்) இல் இருக்கும் கிறிஸ்தவ பாலர் பாடசாலைக்கு ஒரு பெண் ஆசிரியர் தேவை. தனி ஆளுக்குரிய தங்க வசதி செய்து கொடுக்கப்படும். ஊதியம்தராதரம்அனுபவத்திற்குஉகந்ததாயிருக்கும். தராதரப்பத்திரங்களுடன் ஆனி மாதம் 7ம் திகதி முதல் விண்ணப்பிக்கவும். சாம் தம்பு, செயலாளர், தென் இந்திய திருச்சபை, யாழ் ஆதீனம், வட்டுக்கோட்டை. [C 2447]

### வாடகைக்கு

தொழில்புரியும் பெண்கள் கல்லூரி மாணவிகளுக்கு உணவும் விடுதிவசதியும் உண்டு. விபரங்கட்கு: 'GS' Ladies' Academy, 57, Victoria Road, Jaffna, [C 2436]

### வகுப்புகள்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்:24-5-86 மாலை 4 மணிக்கு. ஆசிரியர், Britto ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்களுக்கான விசேட ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஹரிஹரன் அக்கடமி, 337, பலாலி றோட், பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். [C2437]

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவில் சங்காபிஷேகம் நேற்றுக் காலை நடைபெற்று மாலை சுவாமி வீதிவலம்வருதலும் நிகழ்ந்தது.

## பிரயாண ஒழுங்குகள்

ஈராக் நாட்டிற்கு கிளினேர்ஸ் [CLEANERS] ஆண், பெண் இரு பாலாருக்கும் உடன் பிரயாண ஒழுங்கு மேற்கொள்ளப்படும். சனிக்கிழமைக்கு முன் தொடர்புகொள்ளவும்.

வீட்டுப் பணிப் பெண்களுக்கு சவுதி அரேபியா, அபுதாபி, டுபாய், குவைத் ஆகிய நாடுகளுக்கு உடன் ஒழுங்கு செய்யப்படும்.

டென்மார்க் பிரயாணவசதிகளும், பாஸ்போட், பொண்ட் முதலிய வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:

**திருமதி ச. பவானி**

(ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை)

இணுவில். [C2444]

## பிரயாண ஒழுங்குகள்

ஈராக் நாட்டுக்கு கிளீனர்ஸ் (CLEANERS) ஆகச் செல்வதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்படும். ஆண் பெண் இருபாலார்களுக்கும் தொழில் பெறுவதற்கு வேண்டிய ஆலோசனைகள் பெறுவதற்கும் 3 புகைப்படங்கள் கடவுச் சீட்டுடன் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

**T. ஜெயக்குமாரன் (பாலு)**

கிலுவானை ஒழுங்கை,

(கோப்பாய் கிறிஸ்த்தவக் கல்லூரி அருகாமையில்)

கோப்பாய் தெற்கு, கோப்பாய். C 2424

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

**பாஸ்போட், பொன்ட் (BOND), விசா, ரிக்கற்**

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

**INTERSUN GROUP,**

சின்னத்தம்பி அவெனியு,

(மகளிர் கல்லூரி அருகாமை),

மானிப்பாய்.

குறிப்பு: எமது முகவர் மே 25ந் திகதி டென்மார்க் அழைத்துச் செல்வார். ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு முற்பணம், பாஸ்போர்ட் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

A 706

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி

★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்

**24-ந் திகதி** உங்களை குறைந்த செலவில் அழைத்துச் செல்வார்.

**உடனடியாக பாஸ்போட்**

உடன் தொடர்பு கொள்ளவும்.

★ சவூதியில் கிளீனர் ஆண், பெண் இருபாலாருக்கும் வருமான ஒழுங்கும்

★ குவைத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் வருமான ஒழுங்கும்

**பாஸ்போட், BOND, ரிக்கற்**

முதலியனவும் துரித கெதியில் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)

(A 491)

## 45-ம்நாள் நினைவு தினம்

(22-5-86)



**செல்வரட்ணம் யோகராஜ்**

தோற்றம்: 21-11-1958

மறைவு: 8-4- 1986

வல்வையிலே பிறந்த மக்கள் வாணிபம் செய்த நாட்கள், வங்கக்கடலில் கப்பலில் சென்று எண்ணிலடங்கா, எல்லையிலா செல்வங்கள் இணையிலா புகழும் ஈட்டி, எம்மிடத்தில் வந்தவர்கள் எத்தனை எத்தனைபேர் சொல்ல ஏலாதுயரோடு யோகா நீயும் சென்றுவிட்ட சேதிகேட்டு, சோர்ந்து விட்டோம். இனியாம் உம்மை உம்முடம்பை, எவ்விடத்தில் காண்போம். நாற்பத்து ஐந்து நாளாகி, ஏகிவிட்ட உம்மை நாம் நினைவு கூரலானோம்.

தாய், சகோதரர்கள்,
சகோதரி,
மைத்துனிமார்,
பெருமகன்.

U. M. றோட்,
பருத்தித்துறை.

(C-2426)

## திருவூஞ்சல் திருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணியசுவாமி கோவில் திருவூஞ்சல் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கான ஒழுங்குகளை கோவளம் இளைஞர்கள் மேற்கொண்டுள்ளனர்.

## இவற்றுக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை காக்கைதீவு கல்லுண்டாய் பகுதியில் சமீபகாலமாக சிப்பிகளைக் கிளறி எடுப்பதாலும் மண்ணை எடுத்து வருவதாலும் கடல் நீர் அருகாமையில் உள்ள நற்காணிகள் உவர் நிலங்களாக மாற்றமடையுமென விவசாயிகள் பலர் விழிப்புக் குழுவுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அப்பகுதிகளில் சிப்பி கிளறுவதற்கும் மண் எடுப்பதற்கும் தடை விதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அணிவகுப்பு நடாததினர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை ''ஹாபர் வியூ'' இராணுவ முகாமில் நேற்றுக்காலை 7மணியளவில் ஆயுதப்படைகளின் அணிவகுப்பொன்று இடம் பெற்றது

இந்தமுகாமிலுள்ள படையினர் அணிவகுப்பில் கலந்து கொண்ட அதே சமயம் முகாமிற்கு அண்மையில் கடலில் கடற்படைக் கப்பல்கள் பீரங்கிப்படகுகள் என்பன அணிவகுத்துநின்றதாகவும் மூன்று ஹெலிஹொப்டர்கள் வானத்தில் அணிவகுத்து வட்டமிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திடீர் அணிவகுப்பு மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்திய போதும் பின் நிலமை சீரானது.

## நீதிமன்ற ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

1. சி. அண்ணாத்துரையும் பெண்
2. சுப்புலட்சுமியும், தலையாளி, கொக்குவில்

— வழக்காளிகள்

— எதிராக

1. கிருஸ்ணஐயர் மகாதேவ சர்மாவும் பெண்
2. ஜெகதாம்பாளும் இருவரும் மே / பா. முகாமையாளர், நல்லூர் தேவஸ்தானம் நல்லூர்

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஈடு 1733 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி பின்னால் விபரிக்கப்படும். காணியை 1986-ம் ஆண்டு யூன் (ஆனி) மாதம் 18-ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்தவழக்காளிகளுக்கு ரூபாய் 42 000/- வும் மேலும் 30000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 60 வீதம் வட்டி. வழக்கு அணைத்த திகதியாகிய 1982 - ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1985-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 25-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 3910-50 இதில் நடைபெற்ற செலவு 2474-50 நடைபெற வேண்டிய செலவு ரூபா 921-00 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 515-00 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை ''கெட்டையடிவளவு'' டி 459/100 ல் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு ஒன்று குளிபத்தேகாலும் [நில பர. 1 குளி101/4) வீடும் கிணறும், நிலம்பயிர் வலககளும் இதற்கு எல்லை கிழக்கு சிவபாதவிருதையர் பெண்சரஸ்வதி அம்மாவின் ஆதனம், வடக்குகந்தையர் பெண் சரஸ்வதி அம்மாவின்ஆதனம்மேற்கு குகதாசக்குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்களின் ஆதனம், தெற்கு றோட்டு இதடங்கலும் ஆனால் குறித்த கிணற்றில் இதன் மேற்கெல்லைக்காணிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புற நீங்கல்.

சி. மாணிக்கவாசகர்,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

உடையார் வளவு,
புத்தூர் மேற்கு, புத்தூர்.
16 - 05 - 1986. (C - 2442)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

சுதந்திரமே வரையறையற்ற ஒருமையுடன் திகழும் பரமாத்மாவின் தருமமாகும். அகில இயற்கையின் மீது ரகசியமாக ஆட்சி செலுத்துவதும் அதுவே.

—அரவிந்தர்.

# நமது நோக்கு

## அணிசேரா அவைக்கு விடுக்கப்பட்ட சவால்!

தென்னாபிரிக்க நிறவெறி அரசு செய்து வரும் அட்டூழியங்கள் அனைத்தும் வெளிப்படையானவை.

மனிதனுக்கு மனிதன் வேற்றுமை பாராட்டுவது என்பது வேறுவிடயம். ஆனால் சொந்த பிரஜைகளுக்கிடையிலேயே வேற்றுமை பாராட்டி ஓரவஞ்சகமாக நடக்கும் அரசாங்கம் எதுவானாலும் அது இன்றைய நாகரிக சமுதாயத்தின் வெறுப்புக்குரியதே!

இயற்கையின் விளைவால் கறுப்பர்களாகவும் வெள்ளையர்களாகவும் பிறந்துவிட்ட மனித சமூகங்களை தமது ஆட்சிஅதிகாரத்தைப்பயன்படுத்தி வெள்ளையர் உயர்ந்தவர், கறுப்பர் தாழ்ந்தவர் எனக் கற்பித்து அதற்கேற்ப சட்டதிட்டங்களையும் உருவாக்கி வைத்துக்கொண்டு காட்டுத்தர்பார் நடத்துகிறது தென்னாபிரிக்க அரசு.

இதில் வேடிக்கை என்னவென்றால் நாகரிகத்தின் உச்சியை அடைந்துவிட்டதாகக் கருதப்படும் மேற்கு நாடுகளே இந்தக் காட்டுமிராண்டி ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக மிண்டுகொடுத்துவருவதுதான்!

ஜனநாயகத்தின் காவலர்கள் என்று கூறிக்கொள்ளும் பலமேற்கு நாடுகள் தென்னாபிரிக்காவில் இடம் பெற்றுவரும் ஜனநாயகத்துக்கு முற்றிலும் மாறான செயல்களைக் கண்டும் காணாமல் இருந்து வருகின்றன

ஆபிரிக்காவில் கம்யூனிஸ்ட் செல்வாக்கு அதிகரித்து விடாமல் இருப்பதற்கு தென்னாபிரிக்காவின் போத்தா அரசு ஆடாமல் அசையாமல் பதவியில் இருப்பது அவசியம் என்று அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் கருதுவதாகத் தெரிகின்றது. இதன் காரணமாக பிறிட்டோரிய அரசின் மனிதாபிமானமற்ற செயல்களையெல்லாம் அவை பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கின்றன. இதனால் ஆபிரிக்காவிலுள்ள கறுப்பு நாடுகள் பலவும் ''சிவப்பு'' நாடுகளின் நட்பையும் உதவியையும் நாடிச்செல்லக்கூடிய நிலைமை உருவாகியுள்ளதை இவர்கள் உணரவில்லை

இதிலும் பலநாடுகள் தமது தனித்துவத்தை விட்டுக் கொடுக்காமல் அணிசேரா அணியில் தம்மை அடைக்கலப்படுத்திக் கொண்டிருப்பதுகவனத்துக்குரியது

அவ்வாறான நான்கு கறுப்பு இன முன்னணி நாடுகளுக்கு அண்மையில் அணிசேரா நாடுகளின் தலைவரும், இந்தியப் பிரதமருமான திரு ராஜீவ் காந்தி விஜயம் மேற்கொண்டு திரும்பியுள்ளார். இந்த விஜயம ஆபிரிக்க நாடுகளுக்கு உற்சாகத்தையும், உறுதியையும் அளித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

''நமீபியாவுக்கு நிபந்தனையற்ற சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இன ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டுவர உலக நாடுகள் விரிவான கட்டாயத் தடைகளை ஏற்படுத்த வேண்டும். இன ஒதுக்கலுக்கு முடிவுகட்டியே ஆக வேண்டும். அத்துடன் இணங்கிப் போவதென்பது தீமையை ஏற்றுக்கொள்வதாகும்'' என்பன திரு. ராஜீவ் காந்தியின் இந்த விஜயத்தின்போது நான்கு தலைநகரங்களிலும் எதிரொலித்த கருத்துக்களாகும்.

விசித்திரம் என்னவென்றால், திரு. ராஜீவ் காந்தி தாயகம் திரும்பிய மறுதினமே தென்னாபிரிக்கா தனது அண்டை நாடுகளான சாம்பியா, பொட்ஸ்வானா, ஸிம்பாப்வே ஆகியவற்றிலுள்ள ஆபிரிக்க விடுதலை இயக்க காரியாலயங்கள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளமையாகும். அமெரிக்கா உட்பட பல நாடுகள் இதனைக் கண்டித்துள்ளன

அணிசேரா நாடுகளுக்கும், அதன் தலைவருக்கும் தென்னாபிரிக்கா விடுத்துள்ள சவாலாகவே இதனைக் கருதவேண்டும்.

தென்னாபிரிக்கா மீது போர் நடவடிக்கையொன்றில் ஈடுபடும் அளவுக்கு அண்டை நாடுகள் இல்லையென்பது தெளிவு. ஆனால் அணிசேரா இயக்கம் அதன் நேச நாடுகளுக்கு உலக அரங்கில் தென்னாபிரிக்க இனவெறி அரசுக்கெதிராகத் தீவிர பிராசாரப் போர் ஒன்றை நடத்தக்கூடிய சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்தலாம். இதன் மூலம் பல்வேறு வகையிலும் பொருளாதாரத் தடைகளை உருவாக்கி வெள்ளையரின் மூர்க்கமான நெறிபற்ற ஆட்சியைப் பணியவைக்கலாம்

இன்றுள்ள நிலைமையில் இதுவே சாத்தியமான ஒரு காரியம். நீதிக்கும் நியாயத்துக்கும் இடம் கொடாத ஆணவ அரசுக்கு உலக மக்கள் இந்த வகையிலேயே தண்டனை கொடுக்கமுடியும்.

## சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேர்உலா



ஈழத்தில் சிறந்து விளங்கும் கோயில்களுள் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயிலும் ஒன்றாகும். இக்கோயில் ஆரம்பத்தில் கண்ணகை அம்மன் கோயிலாக இருந்தது. பின்னர் 'பறுவதபத்தனை', 'மனோன்மணி' அம்மன் கோயில் எனவும் வழங்கப்பட்டது. 1919ம் ஆண்டளவிலிருந்தே இக்கோயில் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் கோயில் என அழைக்கப்பட்டுவருகின்றது. இன்று இந்த அருள்மிகு அம்மன் தேவஸ்தானத்தில் மாலை 3 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறுகிறது.

## சரத்முத்தெட்டுவேகம மறைவுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு நெருக்கடி மிக்க காலகட்டத்தில் திரு. சரத்முத்தெட்டுவேகமவின் மறைவு ஈடு செய்யமுடியாததாகும்'' என கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ் மாவட்டகுழுவின் சார்பில் அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது

''அகாலமரணமடைந்த மக்கள் தலைவனும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் அரசியல் குழு உறுப்பினரும் லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் உபதலைவரும் தமிழ் தேசிய இனத்தின் நியாயமான உரிமைகளுக்காகபாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல்கொடுத்து போராடிய வரும் கலவானைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் சரத்முத்தெட்டுவேகம அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும்

அகில இலங்கையிலும் வாழும் உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் மக்களும் குறிப்பாக தமிழ்த்தேசிய இனமும் மாபெரும் இழப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

### பொன்குமாரசாமி அஞ்சலி

''இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல குழுஉறுப்பினரும், இலங்கைதொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் உபதலைவரும், தமிழ் தேசிய இனத்தின் உற்ற நண்பனும் கலவானைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர்சரத்முத்தெட்டுவேகம அகால மரணமான செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. இவரது மரணத்தினால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அனைத்து மக்களும் மாபெரும் இழப்பிற்குள்ளாகியுள்ளனர். மாமேதை லெனினுடையி மாபெரும் மார்க்கதரிசனை உண்மையாகவே பின்பற்றிச் சென்றவரும் சிறந்த தேசபக்தனும் எமது காலத்தில் புகழ்மிக்க அரசியல் வாதியுமாக தோழர் சரத்முத்தெட்டுவேகமவே திகழ்ந்தார்.''

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் கிளை செயலாளர் பொன் குமாரசாமி திரு சரத்முத்தெட்டுவேகமவுக்கு அஞ்சலிசெலுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### கம். இடது கட்சி

''இந்நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை அபிலாஷைகளுக்காகவும், உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவும், தமிழ்பேசும் மக்களின் நியாயமான உரிமைகளுக்காகவும், அநீதி அடக்குமுறைகளை எதிர்த்து போராடி வந்த தோழர் சரத்முத்தட்டுவேகமவின் அகால மரணம் நாட்டின் சகல மக்களுக்கும் பேரிழப்பாகும்.''

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின (இ. து) அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் திரு கே. ஏ சுப்பிரமணியம் சரத்தின் அகாலமரணம் குறித்து வெளியிட்டுள்ள அஞ்சலிஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாணவர் அவை அஞ்சலி

''முதலாளித்துவ பாராளுமன்றப் பாதையில் சிங்கள உழைக்கும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க முடியாது என்பதே உண்மையானாலும், ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் ஒடுக்கப்படும் எல்லா மக்களுக்ககாகவும் குரலெழுப்பவாவது தோழர் சரத்முத்தட்டுவேகமவினால் முடிந்தது என்பதை மறக்க முடியாது'' யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை அஞ்சலி செலுத்தி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### ஈழவர் முன்னணி அஞ்சலி

''தமிழ்பேசும் மக்கள் அடைந்துவரும் இன்னல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இக்காலகட்டத்தில் பொதுவாகவும் குறிப்பாகத் தமிழ் மக்கள் விடயத்திலும் குரல் கொடுத்துவந்த ஒரு நல்ல மனிதரை இழந்துவிட்டதை உணரும் அதேவேளை ஈழவர் முன்னணி சார்பில் அவரது குடும்பத்தாருக்கும் அவர் சார்ந்திருந்த மக்கள் அனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.''

## ஞாலம் களிக்க வருவாய் கேதீசா!

ராகம்:- வசந்தா தாளம்:- ஆதி

பல்லவி

கோலத் தேரின்மிசை ஆலமுண்ட ஐயா
ஞாலம் களிக்க வருவாய் - கேதீசா!
— [கோல...]

அனுபல்லவி

வேலைப் பழிக்கும் விழிக்கௌரி அருகிக்க
வேலைத் தரிக்குமையன் வேழ முகத்தனுடன்
— [கோல...]

சரணம்

வாடும் பயிர்களுக்கு வானந் தருமழைபோல
வாடும் அடியவர்கள் தேரினி லுனைக்கண்டு
பாடும் குயில்கள் போல் பேசும் கிளிகள் போல
ஆடும் மயில்கள் போல் ஆனந்தம் கொண்டு ஆட
—[கோல...]

—''முருகு''

[இன்று திருக்கேதீச்சரம் தேர்த்திருவிழா]

## சமூகம் பயன்பட வாழ்ந்தவர்



மண்ணிற் பிறந்தவர்கள் யாவரும் இறந்தாலும் கூட அவர்களில் ஒரு சிலர்தான் என்றும் மக்கள் மனதில் புகழுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இத்தகையோர் வரிசையில் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களும் அடங்குவர்: வாழ்வு தம்மைச் சார்ந்த சமூகத்திற்கு பயனுள்ளதாக அமைதல் வேண்டுமென விரும்பியும் செயற்பட்டும் வந்ததால் தான் அவர்பற்றிய நினைவு எம் சிந்தனையிலே அலைமோதுகின்றது, இதனாற்தான் அவரிழப்பு பேரிழப்பாக ஈடுசெய்ய முடியாத இழப்பாக இருக்கின்றது.

தமிழ் மக்கள் தமது பிரதேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கச் செயற்பட்டு வரும் இக்கால கட்டத்தில் பேராசிரியர் செல்வநாயகம் உயிருடன் இருந்திருந்தால் அவரது ஆற்றல் எமக்கு பலவாறு பயன்படுத்தப் பட்டிருக்கும். ஆராய்ச்சிகள் வெறும் ஏட்டுச்சுரைக்காய் மோறன்வையாக அமையாது சமூகத்தின் நலனுக்காகவே ஆராய்ச்சி முடிபுகள் அமைதல்வேண்டுமென இவர் நம்பியவர். ஆராய்ச்சியாளரின பங்களிப்பு சமூகம் அவன்படைப்புக்களைச்அமைப்பதில் தான் உண்டு என எண்ணி வரண்ட வலயப் பிரதேச குடியேற்றத் திட்டங்கள் பற்றியும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் புவியியல் வளங்கள் பற்றியும் இவர் ஆராய்ந்தார். நமது பாரம்பரிய பிரதேசத்தில் இவருக்குகந்த ஈடுபாட்டின் வெளிப்பாடே இஃதாகும். இறக்கும் போது கூட சாவகச்சேரி தொகுதி புவியியல் வளங்கள் பற்றிய ஆய்வை நடத்திக் கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது தமது ஆய்வுகளிற் கூட தமது சகாக்களையும் ஈடுபடுத்தி அத்துறையில் அவர்களை ஈடுபாடு கொள்ள வைத்ததும் இவரின் மற்றொரு சிறப்பம்சமாகும். செல்வா மறைந்தாலும் கூட அவரின் அறிவியற் பங்களிப்பு அவருடன் மறையவில்லை. அவரது மாணாக்கர்களாலே யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையில் ஆய்வுகள் இன்று நடத்தப்படுவதொன்றே பேராசிரியரின் மற்றுமொரு பிரதான அறிவியற் பங்களிப்பாக விளங்குகின்றது

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, இஸ்ரேலை தழுவியே விமானத்தாக்குதல்’

## தென்னுபிரிக்க அதிபர் கூறுகிருர்

பிறிட்டோரியா, மே 21

**டுனிஷியாவில் இஸ்ரேலும், லிபியாவும் அமெரிக்காவும் பயங்கரவாத நிலைகள் மீது நடத்திய விமானத்தாக்குதல் பாணியைப் பின்பற்றியே ஸாம்பியா, பொட்ஸ்வாஞ, ஸிம்பாப்வே ஆகிய நாடுகள் மீதும் விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தென்னுபிரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.**

தென்னுபிரிக்க அதிபர் திரு. பி.எம்.போத்தா, ஸாம்பியா, பொட்ஸ்வாஞ, ஸிம்பாப்வே ஆகிய நாடுகள் மீது கடந்த இருதினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட விமானத்தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் உள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஃ இயக்கத்தின் கட்டிடங்கள் மீதே விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இந்த இயக்கம் தென்னுபிரிக்காவில் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தென்னுபிரிக்காவின் இத்தாக்குதலை ஐ.நா. உட்பட பெரும்பாலான உலக நாடுகள் பலமாகக்கண்டித்துள்ளன.

கனடா தனது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் வகையில் தென்னுபிரிக்காவிலுள்ள அதன் தூதுவரைத் திருப்பி அழைத்துள்ளது. (கி)


## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் பயணமா?

பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடனே தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

**T. துரைசிங்கம்**

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

பாஸ்போட், விசா, ரிக்கற், பொண்ட் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். C 2430


## இவருக்கும் கட்டாயலீவு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளரான ஜனுப் அப்துல் ஹமீதும் லீவில் அனுப்பப்பட்டுள்ளார். ஏற்கனவே தமிழ் ஊழியர்கள் பலர் லீவில் அனுப்பப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி- 8 (1986- 5- 22)
கிழமை- வியாழன்
திதி- திரயோதசி காலை 7-19 ன் மேல் சதுர்த்தசி
நக்ஷத்திரம்- சுவாதி மு. இ. வரை.

மேடம்- குடும்ப நலனில் புதிய உற்சாகம் பிறக்கும், உறவு முறைகளில் அபிவிருத்தி காணப்படும், அமைதியுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள்.

இடபம்- பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள், இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும், எதையும் சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

மிதுனம்- ஆராய்ச்சிகளில் புதிய ஆர்வம் பிறக்கும், வியாபாரத்தின் மூலம் முன்னேற்றமுண்டு, பொருள்வரவிற்கும் இடமுண்டு.

கடகம்- அறவழிகளில் மனநாட்டம் செல்லும், தாராள மனப்பான்மை மூலம் பணமும் செலவாகும், இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

சிங்கம்-சிறியவிடயம்கூட சிரமாகத் தோன்றும், உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும், வாயுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி-ஏமாற்றம் தாக்கும்’ எதிலும் தயக்கநிலை தென்படும், செய்தொழில் மூலம் நஷ்டம் ஏற்படலாம்.

துலாம்- சிந்தனை புதிர்போடும், சீறிவரும்கோபம் பெரியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம், தொழில் துறையில் புதிய கவலைகள் தோன்றும்.

விருச்சிகம்- புதிய முயற்சிகளில் ஆர்வம் தோன்றக்கூடும், வியாபாரிகளுக்கு இலாபகரமான தினம், புதியதொடர்புகள் மூலம் முன்னேற்றம் ஏற்படும்.

தனுசு- பொருளீட்டுவதில் புதியவழிகளைக் கையாளுவீர்கள், எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள், மக்களாலும் மகிழ்சியுண்டு.

மகரம்- புண்ணிய விருப்புகளில் ஆர்வம் பிறக்கும், பொதுத்துறைகளை மனம்நாடும், கொண்டகொள்கையில் உறுதிப்பாடு தென்படும்.

கும்பம்- ஆசை அலைகளில் அவதிப்படுவீர்கள், வாழ்க்கையில் நிம்மதியற்றநிலை தென்படும், ஆணவப்போக்கினுல் பிறருடைய பகையைச் சம்பாதித்துக் கொள்ள நேரிடும்.

மீனம்- களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும், நீண்டநாள் பகை நிவர்த்தியாகும், காதலர்களுக்கு கற்கண்டான தினம்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

# ★ சித்தன்கேணி ★

# ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில்

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்

## ஆலய வரலாறு

சித்தன்கேணியில் மூர்த்தி, தீர்த்தம், தலம் மூன்றும் ஒருங்குசேர அமையப்பெற்ற கோவிலாக மகா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தானம் அமைந்துள்ளது. இப்பகுதியில் வாழும் மக்களின் குலதெய்வமாக இங்கு எழுந்தருளியிருந்து அருள் சுரக்கும் விநாயகரை சித்தர்கள் வழிபட்டு சித்தி பெற்ருர்கள் என வரலாறு கூறுகின்றது. இவ்வாலயத்தில் காணப்படும் ஒவியங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. வர்ணத்தினுல் தீட்டப்பட்டுள்ளஒவியங்கள் விநாயகப் பெருமானின் பல்வேறு அற்புதங்களை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளன. பிரதான வீதிகளுக்கருகில் மிகப்பொலிவுடன் போற்றுதற்கரிய சூழலில் விநாயகர் கோவில் கொண்டுள்ளார். அழகிய பூந்தோட்டமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தோட்டத்தில் சிவஸ்ரீ அம்பலவாண நாவலரால் ஸ்தாபிக்கப்பட்ட சிவாலயத்தில் சிவலிங்கப் பெருமானும் அம்பிகையும் எழுந்தருளியுள்ளனர். வெளிப்பிரகாரத்தில் முருகன், நாகதம்பிரான் கோவில்கள் அமைக்கப்பட்டிருப்பதும் மேலும் சிறப்பான அம்சங்களாகும்.

நாள் தோறும் தம் கருமங்களை ஆரம்பிக்கும் முன்னர் இவ்வூர் மக்கள் அதிகாலையில் இங்கு வழிபாடியற்றும் காட்சி மனம் நெகிழக் கூடியதாகும். இவ்வாலயத்தில் நடைபெறும் இரதோற்சவம் இவர்களுக்குச் சிறப்பான நாள் எனலாம். விநாயகரும், வள்ளி தெய்வயானையுடன் முருகனும் தேரில் உலாவரும்போது அடியார்களின் பஜனைப் பாடல்களும், அங்கப் பிரதட்சணமும் அப்பிரதேசத்தை புனித தன்மைக்கிட்டுச் செல்லும். தற்போது நடைபெற்றுவரும் மகோற்சவத்தில் இன்று காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகும் இரத பவனி பதினெரு மணிக்கு நிறைவுறும். நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

இவ்வாலயம் அதன்பரிபாலன சபையினுல் சிறப்பானமுறையில் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

**க. அருணுசலம்**
தலைவர்,
பரிபாலனசபை.


**சித்தன்கேணி மத்தியில் இருந்தருளும் ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையார் இன்று தேரேறி அருள் பொழிகின்ருர் இப்பொன்னுளைக் கண்டு இன்புற அனைவரையும் வாழ்த்துகின்றேம்.**

இ. விஜயரத்தினம்
சித்தன்கேணி

கருணுனந்தன் ஸ்ரோர்ஸ்
சித்தன்கேணி

க. அருணுசலம்
சித்தன்கேணி

K. இராஜசிங்கம்
விநாயகர் டயர் வேக்ஸ்
சித்தன்கேணி

லீலா ஸ்ரோர்ஸ்
சங்கானை

புனிதா ஜுவலறி மாட்
32, கஸ்தூரியார் ரோட்
யாழ்ப்பாணம்.

சிறிபோட்டோ சென்ரர்
சித்தன்கேணி

மல்க்கன் லொட்ஜ்,
வீடியோ, கூல்பார் சென்ரர்
சித்தன்கேணி.

தைபூர் டெயிலறிங்
சித்தன்கேணி

இ. சிவஞானமூர்த்தி
கட்டட ஆலோசகர், படம் வரைதல், மதிப்பிடுதல்
‘தர்ம பவனம்’
சித்தன்கேணி

கஜராம்ஸ்
சித்தன்கேணி

அ. சிவசுப்பிரமணியம்
தேநீர்க்கடை
சித்தன்கேணி

இ. சின்னத்துரை
அம்மாளி கடை
சித்தன்கேணி

பாக்கியரட்ணம்
காட்வயர் ஸ்ரோர்
சங்கானை

C 2432


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் மறைந்து இன்றுடன் ஏழாண்டுகள் ஆகிவிட்டன. அவரது இழப்பு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமேற்பட்ட ஒரு இழப்பன்று அவரைச் சார்ந்த சமூகத்திற்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத இழப்பு

சி. க சிற்றம்பலம்,
தலைவர் /வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.


**கடைசிநேர வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

கலர் T. V. இன்டர்விஷன் [philips] 20 சிங்கர் குளிர்சாதனப் பெட்டி, 6 8 விற்பனைக்குண்டு. தனிப் பராமரிப்பு. தொடர்பு மரியநாயகம் ஸ்டோர்ஸ் கஸ்துரியார் வீதி யாழ்ப்பாணம் அல்லது சி. துரைராசா சுழுவன் மத்திய வீதி சுளிபுரம்.

C. 2450

**தேவை**

10 X 10 அடி நீள அகலமுள்ள இரும்பு சுருக்கு கேற் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும் 63, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C. 2448)

**முதலாவது பிறந்ததின வாழ்த்து**

**செல்வன் அருண்சாந்**

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த தர்மகுமார் தேவராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அருண்சாந் இன்று தனதுமுதலாவது பிறந்த நாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா. பேரன்மார், பேத்திமார், மாமன்மார், மாமிமார், சித்தி, மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(C 2458)

**லிடோ Jaffna**

10-30, 2-30,4-30 6-30

VICTORY AT ENTEBBE

[Full of Airport Attack]

[உகண்ட விமானநிலைய நேரடித் தாக்குதல்]

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-15

மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த

**விதி**

(கலர். புதிய பிரதி)

**லிபேட்டி சினிமாவில்**

வெலிங்டன்சந்திக்கு அருகாமையில்

Allen Dod நடித்த

633 SQUADRON

பயங்கர விமானத்தாக்குதல் நிறைந்த யுத்தப்படம். வயது வந்தவர்களுக்கு மட்டும்.

10- 00, 2-15,
4-15, 6-30

வயது வந்தவர் களுக்கு மட்டும்.


## யாழ். மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. இதே போன்று தீவுப் பகுதிப் பாடசாலைகளும் ஒழுங்காக நடைபெறவில்லை.

பளைப் பகுதியில் 3 தினங்களாக பாடசாலைகள் நடைபெறவில்லை வசாவிளான் பகுதியிலும் மாணவர்கள் பாடசாலை செல்லவில்லை.


**31-ம் நாள் நினைவஞ்சலி**



**சரவணபுத்து நாகராசா (துரை)**

அன்னை மடியில்:
1-04-1912

இறைவனடியில்:
22-04-86

ஆறுதல் கூறி ஆத்மா சாந்தி சொல்லி மாறுதல் எதுவுமின்றி மாயவன் அடிபற்றி தேறுதல் எமக்கின்று தேடியேநீவந்திடய்யா! கீறுதல் எதுவுமின்றி கிருஷ்ணனுடன் நீ சேர்ந்து சீறுதல் எதுவுமின்றி சிறப்புடன் ஆன்மா ஈடேறட்டும்.

சுபம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

(C 2454)

**6-ம் ஆண்டு நினைவஞ்சலி**



**செல்வன் நடராசா விக்கினேஸ்வரன்**

(ஈசன்)

தோற்றம்: 1-01-1960
மறைவு: 16-05-1981

எங்கள் அன்புச்செல்வம்
ஈசா
பாசத்தின் பாலமதை
உடைத்தெறிந்து
பரலோகம் சென்று
விட்டாய்.
விக்கினங்கள்
தீர்த்தவனே-
விக்கலென்றும் திரவில்லை
நீ மறைந்து
ஆறுண்டாகியும்
ஆறுத்துயர் நீங்கவில்லை
உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்
அன்பு அப்பா, அம்மா,
பெரியம்மா,
அக்கா தயா, சிறி,
சுதா, சுதன்.
வட்டாரம்-1,
புங்குடுதீவு. (C 2453)


## பண்ணை ஊடாக...

[யாழ்ப்பாணம்]

யாழ்பாணத்திலிருந்து பண்ணைப்பாலமூடாக போக்வரத்துச் சேவை மிகவும் கட்டுப்பாட்டுடன் இன்று தொடக்கம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்

யாழ். தபால் நிலையச் சந்தியால் செல்லும் வாகனங்களும் பண்ணை சந்தியூடாக வரும் வாகனங்களும் மிக மெதுவாக. நேரத்துக்கொரு வாகனமாக சேவையிலீடுபட வேண்டும் என்றும் தினசரி காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மட்டுமே இச் சேவை நடைபெற வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வல்வையில்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த விமானத் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினர் இந்த விமானக் குண்டுத் தாக்குதல் குறித்து யாழ் அரச அதிபருக்குச் சேத விபரங்களுடன் புகார் செய்துள்ளனர். (ரா)

## திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பயமுறுத்தி அறை ஒன்றுக்குள் கொண்டு சென்று பூட்டி வைத்தனர்

இந்த சீமெந்துத் தொழிற்சாலையின் பிரதான பகுதியான கட்டுப்பாட்டு அறைக்குள் 3 வெடிகுண்டுகள் அக்கோஷ்டியிரால் வைக்கப்பட்டன. இதில் இரு குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்ததைத்தொடர்ந்து அப் பகுதி முற்றாகச் சேதமடைந்தது.

தொழிற்சாலைக்குள் இருந்த 'வாக்கி டோக்கி', தட்டச்சு இயந்திரம், மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்ளையடித்த அக் கோஷ்டியினர் ரொயாட்டா வானொன்றையும் கடத்திச் சென்றனர்.

கடத்தப்பட்ட இந்த வான் இரண்டரை மைல் தூரத்திலுள்ள பாலையூற்றுக் காடுக்குள் கைவிடப்பபட்ட நிலையில் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. [மா]

## ஆனையிறவில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் பரந்தனில் தங்கியுள்ளன. இதேவேளை ஒருசில லொறிகள் மட்டும் ஆனையிறவால் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளன.

இந்த லொறிகளில் வந்தோர் இராணுவம் முன்னேறிக் கொண்டிருந்ததைக் கண்டதாகத் தெரிவித்தனர்.

இதே வேளை கவச வாகனங்களும் ஆனையிறவிலிருந்து குறிஞ்சாத்தீவை நோக்கிச் சிறிது தூரம் முன்னேறித் தரித்து நின்றன.

இராணுவத்தை எதிர்த்துப் போராளிகள் பரவலான தாக்குதலை நடத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவங்களையடுத்துஇயக்கச்சி, பளை, எழுதுமட்டுவாள் கொடிகாமம் பகுதிகள் மிகவும் பதற்ற நிலையில் உள்ளன. பளையிலும் இயக்கச்சியிலும் கடைகள் பூட்டப்பட்டுள்ளன.

## பிந்திய செய்தி

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சியிலிருந்து யாழ். நோக்கி நடைபவனியாகவந்து கொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று நண்பகல் தாளிக்குளம் தாளையடிப் பாதையால் கடற்கரையோரமாகப் பருத்தித்துறை நோக்கிப் போய் கொண்டிருப்பதாக ஒருசெய்தி தெரிவிக்கிறது.

இதேவேளை வவனியாவிலிருந்து நேற்று இரவு 8-30 மணிக்கு [illegible] ஒன்று வந்து சேர்ந்துள்ளது. [ஐ]

# எமது தாக்குதலில் 30 ராணுவம் பலி; ஹெலிகொப்டர் சேதம்!

## 'புளட்' அறிக்கை

யாழ்ப்பாணம்)

''கடந்த இரு வாரங்களாக எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களில் சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர். மேலும் கடந்த 17ம்திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்றும் சேதத்துக்குள்ளானது''

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் [புளொட்] விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

''கடந்த சில வாரங்களாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரச படைகளின் நடவடிக்கைகள் தீவிரபடைந்துள்ள நிலையில் தற்காப்பு யுத்தநடவடிக்கையின் ஒரு அம்சமாக எமது இராணுவ தொழில் நுட்பவியலாளர்களின் கண்டுபிடிப்பில்ஒன்றான பி.சி எம் 85 என்ற புதிய ரக கண்ணி வெடித் தாக்குதல்கள் யாழ் பிரதேசம் எங்கும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இத்தகைய எமது தற்காப்பு யுத்த நடவடிக்கையைச் சீர்குலைக்கும் வகையில் சில தேச விரோத சக்திகள் இவ்வகை கண்ணி வெடிகளை எதிர்த்துக் காட்டிக் கொடுத்து வருவதும். வெடிக்க வைக்கும் வயர்களை துண்டித்து வருவதும் போராட்டக் களத்தில் நின்று செயற்படும் தோழர்களின் மனோ நிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு தற்காப்பு யுத்த நடவடிக்கையும் பாதிக்கப்படுகிறது.

இத்தகைய தீய சகதிகளின் நடவடிக்கை தொடருவது போராட்டத்தைப் பின்னடையச் செய்யும் நடவடிக்கையாகும். எனவே இந் நடவடிக்கை தொடருமானால் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

''கடந்த 20 ம் திகதி சிறீலங்கா அரசின் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட கண்ணி வெடி எமது தயாரிப்பில் ஒன்றான பி சி. எம். 85 புதிய ரக கண்ணி வெடியாகும் இதனால் எதிரி விழிப்படைந்து செயற்படுவானாயினும் திட்டமிட்ட வகையில் தொடர்ந்தும் இத்தகைய. தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருகின்றோம்.

''இக் கண்ணிவெடியின் தாக்குத்திறன் அதிகமாக இருப்பதால் இவை வைக்கப் பட்டிருக்கும் இடங்களுக்கு அருகில் மக்கள் எவரும்'' செல்ல வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.''

## ஒரு இராணுவம்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முஸ்லிம்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் சிவில் உடையில் வந்த இராணுவத்தினருக்கும் அப்பகுதி பொது மக்களுக்கும் இடையில் பெண் சம்பந்தமாகத் தகராறு ஏற்பட்டுக் கைகலப்பு நடந்ததாகவும் இதனைத் தொடர்ந்து முகாமுக்குச் சென்ற இராணுவத்தினர் ஆயுதங்களுடன் திரும்பி வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந் இப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ரா)

## மாணவியர்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை, இரு தாய்மார்கள் நேற்று நண்பகல் காரில் இவர்களைக் கூட்டிவரச் சென்றுள்ளனர்.

அரசாங்க அதிபருக்கு அறிவித்த பின்னர் இக்குழுவினர் பகல் 11-45மணிக்குக்கச்சேரியிலிருந்து காரில் புறப்பட்டனர்.

இதனையடுத்து விடுதிமேற்பார்வையாளர் உட்பட இவர்களில் 10 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இருவர் இன்று விடுவிக்கப்படுவர்.

நேற்றுப்பிற்பகல் 3-45 மணியளவில் மேற்படி வித்தியாலய அதிபர் என். கணேசபிள்ளை, தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டத்தலைவி திருமதி செல்வராணி சோமசேகரம் பிள்ளை, த. ஆ, ச உறுப்பினர் திரு. எஸ். அருணகிரி ஆகியோர் உட்பட மூன்று பெற்றோர்கள் வித்தியாலயத்துக்குச் சென்று இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துப்பேசியதனைத் தொடர்ந்தே இவர்களை விடுவதற்கு இராணுவத்தினர் சம்மதித்தனர்.

காவற்காரரான முருகேச பிள்ளை, சமையற்காரரான செல்லத்துரை ஆகியோரை இன்று பிற்பகல் மூன்று மணிக்கு விடுவதாக இராணுவ அதிகாரி உறுதியளித்துள்ளார். [க-ஐ]

## புதிய இராணுவமுகாம்?

[பச்சிலைப்பள்ளி]

ஆனையிறவிலிருந்து புறப்பட்ட இராணுவமும் இராணுவத் தளபாடங்களும் ஆனையிறவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே புதிய இராணுவ முகாமொன்றினை அமைப்பதற்காகத் தான் அனுப்பப்பட்டவையா? எனச் சந்தேகம் எழுந்துள்ளது.

இராணுவத்தினருடன் இராணுவ முகாமினை அமைப்பதற்குத் தேவையான பொருட்களும் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததாக அறியப்படுகிறது.

## சின்னலெப்பை வீட்டுக்கு குண்டுவீச்சு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு 2 வது எம் பி ஜனாப் பிஸ்லி சின்னலெப்பையின் காத்தான்குடியிலுள்ள இல்லத்துக்கு நேற்று அதிகாலை கைக்குண்டு வீசப்பட்டதால் சேதமேற்பட்டது.

ஜனாப் சின்னலெப்பை அப்போது கொழும்பிலிருந்தார். இக் குண்டுவீச்சு சம்பவ நேரம் வீட்டிலிருந்தஅவரது இரு உறவினர்கள் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்

குண்டுவீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டிருந்த ஊர்காவல் படையினர்இரு முஸ்லிம் வாலிபர்களைக் கைது செய்து பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.

## ஆஸ்பத்திரியை பார்வையிட்டனர்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும். பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ் குலசேகரமும் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு நேரில் சென்று ஆஸ்பத்திரி நிலையையும் நோயாளர்களையும் பார்வையிட்டனர்.

வைத்திய நிபுணர் எஸ் சிவகுமார் அரசாங்க அதிபரையும் பொதுசனத் தொடர்பதிகாரியையும் ஆஸ்பத்திரியின் சகல இடங்களுக்கும் கூட்டிச்சென்று நிலைமையை விபரித்தார். [ஐ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 22-5-86

# தீவுப்பகுதி போக்குவரத்துக்கு அராலித்துறை புனரமைக்கப்படும்

[வண்ணார்பண்ணை]

வேலணை - ஊர்காவற்றுறைப் பிரதான வீதியிலிருந்து அராலித்துறைக்குச் செல்வதற்கானப் பாதையை மீண்டும் சீர்படுத்துவதற்கு மூன்று லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பண்ணைப்பாலம் ஊடாகப் போக்குவரத்துத் தடைப்பட்டதால் தீவுப்பகுதி மக்கள் பட்டுவரும் கஷ்டங்கள் பற்றித் தீவுப்பகுதிப் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்த போது அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்.

தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தடையை விரைவில் நீக்க பண்ணைத் தாம்போதி போக்குவரத்து மிக விரைவில் மீண்டும் நடைபெற ஏற்பாடு செய்யப்படவிருப்பதாகவும் யாழ் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் மேலும் தெரிவித்தார்.

## ரயில் பயணிகள் கிளிநொச்சியில் தஞ்சம்

[வவனியா]

கொழும்பிலிருந்து நேற்று இரு ரயில்களில் வந்த 418 பிரயாணிகள் யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் வந்து பிரயாணத்தைத் தொடர முடியாமல் கிளிநொச்சியில்தங்கியிருக்கிறார்கள்.

## ஜனாதிபதி அஞ்சலி

[கொழும்பு]

திரு. சரத்முத்தெட்டுவேகமவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்தன நேற்றுத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

## பட்டினியை எதிர்நோக்கும் நிலையில் தீவுப்பகுதி

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதிக்கும் யாழ்நகருக்குமான சகல தொடர்புகளும் கடந்த 4தினங்களாகத் தடைப்பட்டுள்ளது. இதனால் தீவுப்பகுதி மக்கள் நாட்டின் எந்தப் பகுதியுடனும் தொடர்பற்றவர்களாகியுள்ளனர்.

வாகனங்களின் போக்குவரத்து இல்லாததால் தீவுப் பகுதியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

தீவுப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உணவுப் பொருள்கள் இன்னும் ஒரு வாரத்திற்கு மட்டுமே போதுமானதெனத் தெரியவருகின்றது.

## மருத்துவபீட மாணவர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

கார் விபத்தில் அகாலமரணமடைந்த கலவானை பாராளுமன்ற உறுப்பினர் சரத் முத்தெட்டுவேகமவின் மறைவு குறித்து அனுதாபம்தெரிவிக்குமுகமாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். [ஐ]

## கடைகள் நேற்றும் பூட்டு; பஸ் சேவைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நேற்று ஐந்தாவது தினமாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

சில வீதிகளில் ஒரு சில கடைகள் திறந்திருந்த போதிலும் வியாபாரம் நடைபெறவில்லை. சில கடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன.

வ. போ. ச. பஸ் சேவை நேற்றுக் கொடிகாமம் வரையுமே நடைபெற்றது. தீவுப்பகுதி பஸ் சேவை, வல்வெட்டித்துறை சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்ற வவனியா, மன்னார், கிளிநொச்சி பஸ்கள் யாவும் இயக்கச்சி, பளை, கொடிகாமத்துடன் திரும்பின. [க]

## மருதங்கேணி பாலம் தகர்ப்பு

[பச்சிலைப்பள்ளி]

மருதங்கேணிப் பாலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

யாழ் - கண்டி வீதியையும் தாளையடியையும் இணைக்கும் பாதையிலேயே மருதங்கேணிப் பாலம் அமைந்துள்ளது.

மருதங்கேணிப் பாலம் தகர்க்கப்பட்டதனால் பருத்தித்துறை கிழக்கிலுள்ள பல கிராமங்களுக்கிடையிலான போக்குவரத்துகள் பாதிப்படைந்துள்ளன.

அதேவேளை பருத்தித்துறை கிழக்கிலுள்ள கிராமங்களில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## தீவக மக்களின் படகுப்பயணம்

[வண்ணார்பண்ணை]

தீவுப்பகுதியிலிருந்து நேற்று அராலிக் கடலினூடாக சிறிய மீன் பிடிப்படகுகளின் உதவியுடன் பலர் யாழ்நகர் வந்தடைந்தனர்.

மண்டைதீவிலிருந்து ஒரு படகு நேற்றுக் காலை குருநகர்ப்பகுதிக்கு வந்து சேர்ந்தது.

அராலி ஊடாக யாழ்ப்பாணம் வருவதற்கு வேலணைப் பகுதியிலிருந்து பலர் நேற்று அராலிக்கடற்கரை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

## நேற்றுக்காலை நகரில் ஏற்பட்ட பதற்றம்

(வண்ணார்பண்ணை)

யாழ். நகரில் நேற்றுக்காலை சீருடையினர் திடீரென வந்ததால் நகரம் முழுவதும் சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

வாகனங்கள் சிதறி ஓடின: பொதுமக்கள் திசை தெரியாமல் ஓடினர்; கடைகள் பூட்டப்பட்டன; சீருடையில் வந்தவர்கள் போராளிகளே என்பது தெரிந்ததும் நிலைமை உடன் சீரானது.

## பலர் கொலை

[பச்சிலைப்பள்ளி]

இயக்கச்சிக்கும் பளைக்கும் இடையே பல பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் பலர் காணமற்போயுள்ளதாகவும் தெரியவருகிறது

இயக்கச்சிச் சந்திக்கு அண்மையில் ஒரு வயோதிபப் பெண்ணும் வயோதிபரும், ஒரு இளைஞரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இறந்த வயோதிபத் தம்பதிகளின் சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும், வெட்டுக் காயங்களும் காணப்பட்டதாகத் தெரிகிறது.

இயக்கச்சி உப தபால் நிலையத்திற்கு அண்மையில் இரு சடலங்கள் கருகிய நிலையில் காணப்பட்டன.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி விசுவலிங்கம்



நயினாதீவை பிறப்பிடமாகக் கொண்டவரும், இணுவில் மேற்கு திருமதி கண்மணி விசுவலிங்கம் [21-05-86] அன்று காலமானார். இவர் க. விசுவலிங்கம் (முன்னாள் கடனுதவு சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுன்னாகம் பலநோ கூ. சங்கம்] அன்பு மனைவியும், நயினாதீவு காலஞ்சென்ற வேலாயுதம் தம்பதிகளின் கனிஷ்டபுத்திரியும், ஜெயரட்னசிங்கம் [வருமான மேற்பார்வையாளர், யா அ. ச, உடுவில் உப அலுவலகம்], காலஞ்சென்ற ஜெயபாலன் (முன்னாள் முகாமையாளர் அஜந்தா ஹோட்டல் கொழும்பு), ஜெயகாந்தன (சுவிசர்லாந்து), ஜெயசோதி (படவரைஞர், உள்ளூராட்சித் திணைக்களம், அம்பாறை, ஜெயானந்தன் ஆகியோரின் அன்புத் தயாரும், நயினாதீவு சரவணமுத்து, லெட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற மீனாட்சி, வள்ளிப்பிள்ளை மார்க்கண்டு [திருக்கேதீஸ்வரம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலாதேவி (காங்கேசன்துறை), மதனரூபி, மரியா [சுவிச்சர்லாந்து] ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயபானு, ஜெயமதனா, ஜெயமலர், ஜெனித்தா, ஜெயந்தா மரிசெல்லா [சுவிஸ] ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

''காந்தவாசா''
இணுவில் மேற்கு.
இணுவில்.

இப்படிக்கு,
கணவன், பிள்ளைகள்.
(C 2457)

### தேவராஜா சிவசுப்பிரமணியம்



உரும்பராயைச் சேர்ந்த தேவராஜா சிவசுப்பிரமணியம் கனடாவில் 19-5-80ல் காலமானார் இவர் தேவராசா (ஓய்வுபெற்ற Estate-Supt ). பார்பதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சண்டிலிப்பாய்வடக்கு சிவபாதசுந்தரம் (Retired Station Master) தம்பதிகளின மருமகனும், மிதிலாவின் அன்புக்கணவரும், சரோஜினிதேவி, தியாகராசா (கனடா), சந்திரதேவி, பரசிவராசா (ஓமான்) இவர்களின் அன்புச் சகோதரரும், V. T கந்தசாமி, மகேஸ்வரி, செந்தில்மதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதீபன், சுதர்சினியின் ஆசைமாமனும் மதுராவின் பெரியப்பாவும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-5-86 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- தேவராசா குடும்பத்தினர்,
'தேவகம்', உரும்பராய் கிழக்கு.
[C-?443]

## மரண அறிவித்தல்

### சம்பந்தர் இலட்சுமிப்பிள்ளை

ஊரெழு கிழக்கைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற தபாலதிபர் கதிரேசர் சம்பந்தர் அவர்களின் மனைவி சம்பந்தர் இலட்சுமிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் சிந்தாமணி [லண்டன்], பவளமணி [லண்டன்], நாகலிங்கம் மனோன்மணி [லண்டன்], சண்முகலிங்கம், தங்கமணி, சுந்தரமணி இவர்களின் தாயாரும், காலஞ்சென்ற தில்லையம்பலம், பசுபதி [லண்டன்], நமசிவாயம் [லண்டன்], குணேந்திரம், சுரேந்திரா [லண்டன்] இவர்களின் மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஊரெழு கிழக்கிலுள்ள மகன் நாகலிங்கத்தின் இல்லத்திலிருந்து இன்று வியாழக்கிழமை [22-5-86] மாலை 3 மணியளவில், பொக்கணை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

C 2460
தகவல்: ச. நாகலிங்கம்.

### திரு. தம்பையா சதாசிவம்

நாச்சிமார் கோவிலடி 41/A, சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த தம்பையா சதாசிவம் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவஞானசுந்தரப், கானமூர்த்தி [சவூதிஅரேபியா], ஜெயச்சந்திரன், வனிதாமணி, இராஜேந்திரா (ஜேர்மனி) விஜயசிறீ (பிரான்ஸ்), ஜெயசிறீ (பிரான்ஸ்), கலாவதி, மதிமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபாலநாதன், இராஜேஸ்வரி, ரஞ்சன ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதர்ஜினி, சங்கீதா, கிருஷ்ணரூபன், சிவப்பிரியா, நிரஜா, கீரவாணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் 22-5-1986 (இன்று) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பய மணல் மயானத்திற்கு காலை 10 00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(C-2456)
தகவல்: சிவஞானசுந்தரம்.

### அகிலேசர் சிவசம்பு

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மல்லாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய அரசாங்க லிகிதர் அகிலேசர் சிவசம்பு கச்சேரி யாழ்ப்பாணம்), 2?-5-86 புதன்கிழமை காலமாகிவிட்டார் இவர் சாரதாதேவியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன் [இந்தியா], துஷ்பந்தி [உடுவில் மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கப்பிள்ளையின் அன்பு மருமகனும், ச. மயிலுப்பிள்ளை (நைஜீரியா)யின் அன்புச் சகோதரரும், அ. சிவயோகநாதன் மின்சார இலாகா, காங்கேசன்துறை) அன்பு மைத்துனரும், சிவசுப்பிரமணியம் [சாஷன்] அவர்களின் அன்பு மாமனுமாவார் அன்னாரின் பூதவுடல் (22-5-86) இன்று வியாழக்கிழமை பி. ப. 2 மணியளவில் மலலாகம் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

பாடசாலை ஒழுங்கை,
மல்லாகம்.

மனைவி, மக்கள்,
மைத்துனர்.

[C 2459]